# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, ஜூன் 19 ஆம் தேதியாகிய இன்று, தேர்ந்தெடுக்கப்பட்ட பெரிய பூங்காக்களில் கழிப்பறைகளை மீண்டும் திறக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 19, 2020) – ப்ராம்ப்ட்டன் நகரை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு மீண்டும் திறந்து, மீட்சி பெறுவதற்கான திட்டத்தின் ஒரு அங்கமாக, ஜூன் 19 ஆம் தேதியாகிய இன்று தேர்ந்தெடுக்கப்பட்ட பூங்காக்களில் உள்ள கழிப்பறைகளை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது மீண்டும் திறக்கிறது.

நகர நிர்வாகமானது சமுதாயத்தினரின் உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை தீவிரமாக கருதுகிறது; மேலும் நமது சமுதாயத்தில் பூங்காக்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதால், அத்தியாவசியமான பயன்பாட்டு வசதியான கழிப்பறையை குடியிருப்புவாசிகள் அணுகுவதை உறுதி செய்வதே  அடுத்த நடவடிக்கையாகும்.

கீழ்க்கண்ட பூங்காக்களில் திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையிலும், மற்றும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்  காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் கழிப்பறைகள்  திறந்திருக்கும்:

- பேட்ஸ்மேன் பார்க்
- ச்சிங்காகௌஸி பார்க்
- க்ரெடிட்வ்யூ சாண்டல்வுட் பார்க்
- எல்டோரடோ பார்க்
- கேஜ் பார்க்
- மெக்கேண்ட்ல்ஸ் பார்க்
- டொராமோட்டோ பார்க்

கழிப்பறைகளில் தூய்மைப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டு, கழிப்பறைகள் அடிக்கடி சுத்தம் செய்யப்படுதல் உறுதி செய்யப்படும்; மற்றும் குடியிருப்புவாசிகள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதில் உற்சாகப்படுத்த குறியீடுகளுடனான அறிவிப்பு பலகைகளும் வைக்கப்படும்.

## கோவிட்-19 (COVID-19) பாதுகாப்பு நடவடிக்கைகள்

குடியிருப்புவாசிகள் இதுபோன்ற  கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை தங்கள் வசம் வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; மற்றும் இருமுதல் , தும்முதலின்போது தங்கள் முழங்கைகளில் முகம் புதைத்து இருமவோ தும்மவோ செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஆபத்துக்களை தொடர்ந்து கண்காணிப்பதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ப்ராம்ப்ட்டன் அவசரநிலை மேலாண்மை அலுவலகம் ஆகியவற்றுடன்  நெருக்கமாக செயல்படுகிறது.  வழக்கமான புதுப்பிப்புகளுக்கு

www.brampton.ca/covid19 ஐப் பார்வையிடவும் மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் மற்றும் ரீஜன் ஆஃப் பீல் அமைப்பை அணுக 311 என்ற எண்ணை அழைக்கவும்

MEDIA CONTACT
Monika Duggal
Coordinator, Media & Community Engagement
Strategic Communication
City of Brampton
905-874-3426 | Monika.Duggal@brampton.ca